- 031

SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

CENTRE FOR EXTERNAL DEGREES AND PROFESSIONAL LEARNING

# SECOND YEAR EXAMINATIONS IN BACHILOR OF COMMERCE (EXTERNAL) – 2011/2012

HELD IN JUNE / JULY 2013

## BCOM 23 – COMMERCIAL AND INDUSTRIAL LAW

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக. நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. ஆ) வலிதான ஒப்பந்தம் ஒன்றின் முக்கிய கூறுகளை சுருக்கமாக விளக்குக

(10 புள்ளிகள்)

ஆ) கொடை முனைவிற்கான அழைப்பின் (Invitation to treat) பல்வேறு வகைகளைக் குறிப்பிட்டு தீர்க்கப்பட்ட வழக்குகளை ஆதாரம் காட்டி விளக்குக

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. அ) கொடை முனைவு ஒன்றினை வெற்றிகரமாக கைவாங்க (revocation) நினைக்கும் வியாபார நிறுவனம் ஒன்றிற்கு நீர் கூறும் ஆலோசனைகள் எவை?

(10 புள்ளிகள்)

ஆ) A நிறுவனம் B ற்கு இரு வார காலத்திற்குள் பதவியேற்குமாறு கூறி நியமனக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தது. B அந்நியமனத்தை ஏற்றுக் கொள்வதாகவும் தான் இன்னுமொரு நிறுவனத்தில் பணிபுரிவதினால் 3 வாரத்தில் குறித்த நியமனத்தின் பிரகாரம் பதவியேற்பதாகவும் கூறி தனது ஏற்புக் கடிதத்தை அனுப்பி வைத்தார். A நிறுவனம் இரு வாரங்களின் முடிவில் C என்பவரை குறித்த பதவியில் நியமித்தது. B உமது ஆலோசனையை நாடுகிறார்.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

03. ஆ) அவசிய முகவராண்மை (Agency by Necessity) எழுவதற்கு காணப்பட வேண்டிய நிபந்தனைகளை தீர்க்கப்பட்ட வழக்குகளை ஆதாரம் காட்டி விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) ஒரு முகவரின் கடமைகளை குறிப்பிட்டு விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

04. ஆ) பொருட்கள் விற்பனைக் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் நிபந்தனை (Conditions) மற்றும் உத்தரவாதம் (Warranties) போன்ற பதப்பிரயோகங்களை வேறுபடுத்தி விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) பொருட்கள் விற்பனைக் கட்டளைச்சட்டத்தின் அடிப்படையில் மறைமுக ஏற்பாடுகள் (Implied Terms) என்பதன் ஊடாக நீர் விளங்குவது யாது? அத்தகைய மறைமுக ஏற்பாடுகளை குறிப்பிட்டு விளக்குக. பொருத்தமான சட்டப்பிரிவுகள் தீர்க்கப்பட்ட வழக்குகள் என்பவற்றை ஆதாரம் காட்டுக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

05. ஆ) நீதிமன்றின் உத்தரவின்றி பங்குடமையொன்று முடிவுறுத்தப்படும் சூழ்நிலைகளை சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

ஆ) பங்குடைமை ஒன்றின் பிரதான பண்புகளில் ஒன்று பங்காளர்களுக்கடையிலான இலாபப்பகிர்வாகும். ஆனால் இலாபப்பகிர்வு எல்லா வேளைகளிலும் பங்குடமை ஒன்றிற்கான அத்தாட்சியாக அமையாது. விளக்குக.

(10 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

06. பொருட்கள் விற்பனைக்கட்டளைச் சட்டத்தின் அடிப்படையில், மீறப்பட்ட ஒப்பந்தம் தொடர்பில் விற்பனையாளர் மற்றும் கொள்வனவாளர்களுக்கு உள்ள உரிமைகளை பொருத்தமான சட்டப்பிரிவுகள் மற்றும் தீர்க்கப்பட்ட வழக்குகளை ஆதாரம் காட்டி விளக்குக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

07. பின்வருவனவற்றில் எவையேனும் நான்கு (04) பற்றி சிறுகுறிப்பெழுதுக.

1. ஒரு தலைப்பட்டசமான கொடை முனைவு (Unilateral offer)
2. Domestic Agreement
3. பிரதிபலன் (Consideration)
4. சட்டத்தின் தோற்றுவாய்கள் (Sources of Law)
5. விற்பனை மற்றும் விற்பதற்கான உடன்பாடு
6. Spiro Vs Lintern
7. பங்காளர்களுக்கிடையிலான கடமைகளும் பொறுப்புக்களும்

(1 x 5 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)